# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

# DEPOSITION OF WITNESS

# O.S.127/2022

# CNR.No.TNCB19000

| | | | |
|---|---|---|---|
| 18.06.2024 | ஜான்சன் பாண்டியன் | த/பெ.வேதமாணிக்கம் | .பி.வா.சா.1 |

பி.வா.சா.1 ஜான்சன் பாண்டியன் மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

**குறுக்கு விசாரணை**

நான் நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் குடியிருந்து வருகிறேன். சுமார் 25 வருடங்களாக வசித்து வருகிறேன். அதற்கு முன்பு பரமக்குடியில் இருந்தேன். அது என் சொந்த ஊர். பரமக்குடியிலும், மேட்டுப்பாளையத்திலும் எனக்கு வீடு உள்ளது. வழக்கு சொத்தின் உரிமை மூலம் பற்றி ஆவணங்கள் வாயிலாகவும் சொத்துக்கு அருகில் வசித்து வருபவர்களை விசாரித்து தெரிந்து கொண்டேன். தாவா சொத்தின் மூல ஆவணம் 1956 ம் வருடம் மே மாதம் 30 ம் தேதி எழுதப்பட்ட கிரைய பத்திரம் என்றால் சரிதான்.

அந்த ஆவணத்தின் சொத்தின் உரிமையாளர் செட்டிவளையன் என்ற நபர் இறந்து விட்டதாக அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் கண்ட சொத்து செட்டிவளையனின் மூதாதையர் சொத்து என்றால் சரிதான். செட்டி வளையனின் வாரிசுதாரர்களை விசாரித்து தெரிந்து கொண்டேன். செட்டி வளையனின் வாரிசுகள் சொத்தில் வரும் வருமானத்தை வைத்து ஜீவனம் செய்தார்கள் என்றால் சரிதான்.

காளியம்மாளுக்கு நான்கு பெண் பிள்ளைகள் இரண்டு ஆண் பிள்ளைகள். 30.05.1956-ல் ஆவணம் ஏற்படும்போது செட்டிவளையனின் மனைவி காளியம்மாள் ஆகியோர்களுக்கு வாரிசுகள் மைனர்களாக இருந்தார்கள் என்றால் ஒரு பெண்ணை திருமணம் செய்து கொடுத்தார்கள் மற்றவர்கள் அனைவரும் இளவர்களாக இருந்தார்கள். அந்த பெண்ணின் பெயர் ரங்கம்மாள் என்று 30.05.1956 ம் தேதியில் ஏற்பட்ட ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

அந்த ஆவணத்தில் ரங்கம்மாள் என்பவரின் திருமணத்திற்காகதான் விற்பனை செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் திருமணத்திற்காகவும் ஆறுமுகம், முருகன் மற்ற நபர்களையும் பராமரிப்பதற்காகவும் விற்பனை செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சொன்ன சங்கதிகள் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் அந்த ஆவணத்தில் என்னுடைய பெண் மகள் ரங்கம்மாளின் கல்யாண செலவிற்காக மட்டும்தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மேற்கண்ட சங்கதிகளை ஆவணங்களை படித்து தெரிந்து கொண்டு வழக்கிற்காக தற்போது பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் 3 -ம் பத்தியில் வாதியின் தாயார் தாவா சொத்தை தனக்காகவும் வாதி மற்றும் முதல் பிரதிவாதிக்காகவும் சேர்த்து குடும்பத்தின் அத்தியாவசிய செலவிற்காக கிரையம் செய்து கொடுத்த காரணத்தினால் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த விசயம் தவறான பொய்யான விசயம் என்றும் நீதிமன்றத்தை தவறாக வழி நடத்த சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

வாதியின் Natural Guardian தான் காளியம்மாள் என்றால் சரிதான். அவ்வாறு Natural Guardian ஆக இருந்து மைனர் சொத்துக்களை விற்க வேண்டும் என்றால் நீதிமன்றத்தில் அனுமதி பெற வேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் அவசியம் இல்லை. நான் பி.எஸ்ஸி . பி.எல்., படித்துள்ளேன். வழக்கறிஞராக பணியாற்றி வருகிறேன். நீலகிரி மாவட்டம் ஊட்டியில் பணியாற்றி வருகிறேன். நான் வழக்கறிஞராக இருப்பதால் இளவர் சொத்துக்களை விற்பனை செய்ய நீதிமன்ற அனுமதி வேண்டும் என்பதை தெரிந்து கொண்டு வழக்கிற்காக அவசியம் இல்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

இளவர் சொத்துக்களை விற்பனை செய்தால் இளவர் மேஜரானவுடன் 3 வருடத்திற்குள் ஆவணங்களை ரத்து செய்ய வேண்டும் என்ற சங்கதியை முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். இளவர் மேஜரானவுடன் அவர்களுக்கு எப்போது அவர்களுடைய அறிவுக்கு தெரிகிறதோ அப்போதிருந்து 3 வருடத்திற்குள் ரத்து செய்து கொள்ளலாம் என்றால் வழக்கிற்கு பொருந்தாது. நான் சொத்துக்களை 16.07. 2013 அன்று வாங்கினேன். அதிலிருந்து

7 மாதத்திற்குள் இந்த வழக்கை வாதிகள் தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால் சரிதான்.

30.05.1956 ம் ஆண்டு வழக்குச் சொத்து விற்பனை செய்யும் போது வாதிக்கு 3 வயது என்றால் சரிதான். அதை நான் விசாரித்து தெரிந்து கொண்டேன். அந்த சொத்தை நான் விலைக்கு வாங்குவதற்கு 3 வருடத்திற்கு முன்பு யார் சுவாதீனத்தில் இருந்தார்கள் என்று விசாரித்து தெரிந்து கொண்டேன். நேரடியாகவும் விசாரித்து தெரிந்து கொண்டேன். 2010 ம் ஆண்டுக்கு முன்பு யார் அந்த சொத்தில் விவசாயம் செய்து வந்தார்கள் என்ற விபரம் தெரிந்து கொண்டேன் பக்கத்தில் இருந்த ரங்கராஜன் வேலு ஆகியோர்களை விசாரித்து தெரிந்து கொண்டேன்.

தாவா சொத்துக்கள் இளவரின் சொத்துக்கள் என்பதை தெரிந்து கொண்டு இளவர் சொத்துக்களை விற்பதற்கு நீதிமன்ற அனுமதி பெறப்படவில்லை என்பதை தெரிந்து கொண்டு சட்ட விரோத லாபம் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் வழக்குச் சொத்துக்களை கிரையம் பெற்றதை தவிர நல்ல எண்ணத்தின்பால் கிரையம் பெற்ற Bonafide Purchaser அல்ல என்றால் சரியல்ல. வழக்கறிஞரின் கருத்துரை பெற்றதாக முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேன் அந்த கருத்துரையை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் வாய்மொழியாக கருத்துரை சொன்னார்.

வாய்மொழியாக கருத்துரை பெற்றதாக முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் ஆழ்துளை கிணறு எப்போது தோண்டினேன் என்றால் வாங்கிய இரண்டாவது நாளில் தோண்டினேன். ஆழ்துளை கிணறு தோண்டியதற்கான ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தில் 2022 ம் ஆண்டில் தான் ஆழ்துளை கிணறு தோண்டினேன் என்றும் தற்போது வழக்கிற்காக தாவா சொத்து வாங்கிய இரண்டாம் நாளில் ஆழ்துளை கிணறு தோண்டியதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மின் இணைப்பு எந்த வருடத்தில் வாங்கினேன் என்றால் 2016 ல் வாங்கினேன். அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் கட்டண ரசீதை தாக்கல் செய்துள்ளேன். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் மின் இணைப்பு வாங்கும்போது

ஆழ்துளை கிணறு தோண்டும்போதும் வாதிகள் ஆட்சேபணை செய்யவில்லை என்று கூறியிருக்கிறேனா என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகுதான் மின் இணைப்பு பெற்றேன். தாவா சொத்து வறண்ட பூமி என்றால் சரிதான். வறண்ட பூமியில் விவசாயம் செய்வதாக அடங்கல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வருவாய் ஆவணங்களான அடங்கல், சிட்டா , ஆகியவைகள் வருவாய்துறையினரிடம் பெற்று வழக்கிற்காக தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

தாவா சொத்து இன்றளவும் வறண்ட பூமியாகதான் இருக்கும் என்றால் அவ்வப்போது மழைக்காலங்களில் விவசாயம் செய்கிறேன். அதில் வேறு எந்த விவசாயம் செய்யக்கூடிய வகையிலான மரங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். நிழல்தரும் மரங்கள் உண்டு. அந்த மரங்கள் எத்தனை வருடங்களாக உள்ளது என்றால் நான் வாங்கும்போதே இருந்தது. நானும் மரங்கள் வைத்தேன். தாவா சொத்தை வாங்கிய பிறகு தாவா சொத்தில் வாதி பிரச்சினை செய்தது குறித்து காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. யாரும் உரிமைகோரவில்லை.

வாதிகள் உரிமை கேட்டு பிரச்சினை செய்ததை மறைத்து காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தை அவர் இளவராக இருக்கும்போது பெற்ற கிரையத்தின் அடிப்படையில் கிரையம் பெற்றதால் அந்த கிரைய ம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நீதிமன்ற அனுமதி பெறாமல் இளவர் சொத்துக்களை கிரையம் பெற்ற சொத்துக்கள், ஆவணங்கள் ரத்து செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

<u>3 முதல் 13, 15 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை - இல்லை</u>

<u>அனுமதியுடன் மறு விசாரணை</u>

என்னுடை பிறந்த தேதி 04.06.1968. நான் கிரையம் பெற்ற நபர்கள் யாரும் மைனர்கள் இல்லை.

<u>மறு குறுக்கு விசாரணை</u>

நான் கிரையம் வாங்கும்போது தாவா சொத்தின் மூல ஆவணங்களை பார்த்து இளவர் சொத்துக்கள் கிரையம் பெற்றதை தெரிந்து கொண்டேன். இளவர் சொத்துக்களை கிரையம் பெற்றதற்கு நீதிமன்ற அனுமதி பெற்றார்களா என்பது தெரிந்து கொண்டேனா என்றால் அதற்கு அவசியம் இல்லை. இளவர் சொத்தை விற்பதற்கு நீதிமன்ற அனுமதி தேவை என்பதை தெரிந்து சட்ட விரோதமாக கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி
என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம் மேட்டுப்பாளையம்.